**24 06 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** கத்தார் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு உடனடியாக உதவிய அந்நாட்டு மன்னருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

**2.** நிலையான பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, வலுவான பன்முக ஒத்துழைப்பு அவசியம் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

**3.** பத்ம பூஷன் விருது பெற்ற சமூக சேவகர் திரு. எஸ்.கே.எம். மயிலானந்தனுக்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**4.** அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கும் "தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம்" அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் **15**ஆம் தேதி தொடங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

**5.** உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் போர்ச்சுகல் அணி **5**க்கு பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கத்தார் நாட்டின் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த சம்பவத்திற்கு அந்நாட்டு மன்னர் **Sheikh Tamim Bin Hamad Al-Dani** இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடியை கத்தார் மன்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெறுபவர்கள் விரைந்து குணமடைய தமது விருப்பத்தையும் அப்போது அவர் தெரிவித்துக்கொண்டார்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கத்தார் அரசு அளித்துள்ள உதவிகளுக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு மன்னருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

கத்தாரில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இரு நாடுகளின் தலைவர்களும் உறுதிபூண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த உரையாடலின்போது மேற்காசிய நிலைமை குறித்து விவாதித்த அவர்கள், அமைதி முயற்சிக்கு கத்தார் மேற்கொண்டு

வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டுவதாக குறிப்பிட்டார்.

இந்தப் பிராந்தியத்தில் விரைவில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்பட கத்தார் மன்னரின் முயற்சிகள் வழிவகுக்கும் என்றும் பிரதமர் அப்போது நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

நிலையான வளர்ச்சியை விரைவுபடுத்தவும், அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்யவும் வலுவான பன்முக ஒத்துழைப்பு அவசியம் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ஃபிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரோன் தலைமையில் G7 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற வளர்ச்சிக்கான உலகளாவிய ஒருங்கிணைப்பு உச்சிமாநாட்டில் புதுதில்லியில் இருந்து காணொலி மூலம் அவர் உரையாற்றினார்.

மீண்டு வரக்கூடிய பொருளாதாரத்தை கட்டமைப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாகவும், G7 நாடுகளுடன் பரஸ்பர அளவில் பொருளாதார நல்லுறவை இந்தியா கொண்டிருப்பதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

உலக அளவில் தற்போது ஏற்படும் மோதல்கள் மற்றும் ஸ்திரமற்ற சூழல் காரணமாக வளரும் நாடுகள் மற்றும் தெற்கு பகுதி நாடுகள் பாதிப்புக்குள்ளாவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சவால்களை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த உலகளாவிய நடவடிக்கை அவசியம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>

பத்ம பூஷன் விருது பெற்ற சமூக சேவகர் திரு. எஸ்.கே.எம். மயிலானந்தனுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவிடமிருந்து, தமிழகத்தைச் சேர்ந்த சமூக சேவகர் திரு. எஸ்.கே.எம். மயிலானந்தன், பத்ம பூஷன் விருதைப் பெற்றுக்கொண்டார்.

அவருக்கு வாழ்த்து தெரிவித்து டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சிறந்த சமூக சேவகரான திரு. எஸ்.கே.எம். மயிலானந்தனுக்கு தமது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், புதுதில்லியில் நேற்று ரஷ்ய பாதுகாப்பு ஆலோசகர் Sergei Shoigu-வை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்றுள்ள கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு நடைபெற்றது.

ரஷ்யா முன் வைத்துள்ள திட்டம் குறித்து அப்போது இருவரும் விரிவாக விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் விளையாட்டு விடுதிகளுக்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாநில பொதுப்பணி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் விளையாட்டு மைதானங்களில் இளைஞர்கள் விளையாடுவதற்கு ஏதுவாக பல்வேறு உபகரணங்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

மாநிலத்தின் விளையாட்டு பயிற்சியாளர்களுக்கு வெளிநாட்டு பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாகவும் திரு. ஆதவ் அர்ஜூனா தெரிவித்தார்.

முன்னதாக பல்வேறு மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மற்றும் இளைஞர் அரங்கங்களை அவர் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், தமிழகத்தில் இருந்து ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற முன்னாள் வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

<<<<>>>>

காவிரியில் ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 40 டி.எம்.சி. தண்ணீரை விடுவிக்க வேண்டும் என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கர்நாடக அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நேற்று இந்த ஆணையத்தின் 52வது கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கர்நாடக நீர்வளத்துறை அதிகாரிகள், தமிழகத்தின் சார்பில் நீர்வளத்துறை முதன்மைச் செயலாளர் திரு. சத்யபிரதா சாகு, காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் திரு.

சுப்பிரமணியம் மற்றும் கேரளம், புதுச்சேரியைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அப்போது வழக்கமாக தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய தண்ணீரை உடனடியாக திறந்துவிட வேண்டும் என கர்நாடக அரசுக்கு காவிரி நீர் ஆணையம் அறிவுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

முஹரம் மற்றும் வார இறுதிநாளை முன்னிட்டு, பயணிகள் நெரிசலை சமாளிக்க சென்னை எழும்பூர் - போத்தனூர் இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

எழும்பூரில் இருந்து நாளை இரவு மணி 11.50க்கு புறப்படும் சிறப்பு ரயில் அடுத்த நாள் காலை மணி 10.55க்கு போத்தனூர் சென்றடையும்.

மறுமார்கத்தில் வரும் 28ஆம் தேதி இரவு மணி 11.55க்கு புறப்படும் இந்த ரயில், அடுத்த நாள் காலை 11 மணிக்கு எழும்பூர் வந்தடையும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம், அண்ணா பிறந்த நாளான வரும் செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

அன்றைய தினம் முதலமைச்சர் திரு. விஜய் இத்திட்டத்தை தொடங்கி வைப்பார் என அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த 22ஆம் தேதி முதல் அரசு மருத்துவமனைகளில் பிறந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் இந்த திட்டம் பொருந்தும்.

இத்திட்டத்திற்காக ஆண்டுக்கு 755 கோடியே 83 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

கடலூர் அரசு மருத்துவமனையில் பல் மாற்று சிகிச்சை பெற்ற பெண் ஒருவர், தவறான சிகிச்சை காரணமாக உயிரிழந்திருப்பதாக வெளியான செய்தி அதிர்ச்சியளிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அந்தப் பெண்ணிடம் பல் மாற்று சிகிச்சைக்காக சட்டவிரோதமாக பணம் பெற்றதாக எழுந்துள்ள புகார் அரசு மருத்துவமனைகளில் லஞ்ச வேட்டை நடைபெறுவதை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தவறான சிகிச்சை அளித்து அப்பாவிப் பெண்ணின் உயிரைப் பறித்த சம்பவத்தில் தவறிழைத்தவர்கள் மீது மாநில சுகாதாரத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அரசு மருத்துவமனைகளில் தரமான சிகிச்சை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்கான கட்டுப்பாடுகளை முற்றிலுமாக நீக்குவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்து வருவதாக அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

-------------

ஈரான் பிரிவினைவாத குழுக்கள் தாக்குதலைத் தொடரும் வரை, மேற்காசிய பிராந்தியத்தில் அமைதி ஏற்பட வாய்ப்பில்லை என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

-------------

ஏமன் நாட்டின் **Al-Dhalea** மாகாணத்தில் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி குழுவினருக்கும் - அரசுப் படையினருக்கும் இடையே நேற்று மீண்டும் மோதல் ஏற்பட்டது. உயிரிழப்பு குறித்து உடனடியாக தகவல் இல்லை.

------------

இந்தியா - அமெரிக்கா இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு வர்த்தகப் பிரதிநிதி **Jamieson Greer** தலைமையிலான குழுவினர் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை புதுதில்லியில் சந்தித்துப் பேசினர்.

-------------

தலைநகர் தில்லியில் நேற்று வீசிய புழுதிப் புயல் காரணமாக வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் அவதிக்குள்ளாயினர்.

-------------

விழுப்புரம் மாவட்டத்தில் பொது இடங்களில் அனுமதியின்றி பேனர்கள் வைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. மதிவாணன் எச்சரித்துள்ளார்.

-------------

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் மாணவர் நல மையத்தின் சார்பில் 2 நாட்கள் நடைபெறும் வேலைவாய்ப்பு முகாம் நேற்று தொடங்கியது.

-------------

நீலகிரி மாவட்டம் குன்னூரில் 10 கோடியே 36 லட்சம் ரூபாய் கோவில் நிதியில் அடுக்கு நிலை வாகன நிறுத்துமிடம் கட்டுமானப் பணிகளுக்கான ஆணை ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

-------------

துணை ஆட்சியர் உள்ளிட்ட குரூப்-1 பணியிடங்களுக்கான முதல் நிலைத் தேர்வு, வரும் செப்டம்பர் 6ஆம் தேதி நடைபெறும் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் போர்ச்சுகல் 5-0 என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

ஹூஸ்டன் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் 2 கோல்களை அடித்த போர்ச்சுகலின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

கானா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோல் எதுவுமின்றி டிராவில் முடிந்தது.

டொரான்டோவில் நடைபெற்ற குரோஷியா - பனாமா இடையேயான ஆட்டத்தில் குரோஷியா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கொலம்பியா - காங்கோ இடையேயான ஆட்டம் காலை மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**